**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 15.04.2025**

**முன்னிலை**

# திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 20910/SCIC/2023

திரு.அ.ராயர் த/பெ. அப்பாசாமி — மேல்முறையீட்டாளர்
கீழ்ராவந்தவாடி
க.எண்.934, டேங்க் தெரு
தண்டராம்பட்டு அஞ்சல் மற்றும் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம் - 606 707.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம் … பொது அதிகார அமைப்பு
செங்கம், திருவண்ணாமைலை.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 28/08/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், செங்கம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “கீழ்ராவந்தவாடி கிராம சர்வே எண்.59/3 5.31-ல் ஆவண எண்.1449/1960 மற்றும் 59/2 0.75-ன் ஆவண எண்.1138/1955 இந்த இரண்டு பத்திரப்பதிவிற்கு பயன்படுத்திய தாய்பத்திர நகல் மற்றும் வேறு ஏதேனும் மூலபத்திர நகல் அளித்து இருந்தால் அந்த தாய் பத்திர நகலினை வழங்கவும் ” எனக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், செங்கம் சார்பதிவாளர் அலுவலகம், அவர்கள் மனுதாரருக்கு கடித எண்.344/2023, நாள் /09/2023 வாயிலாக தகவல் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 29/09/2023 மற்றும் 09/10/2023 தேதிகளிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுக்களை மாவட்டப் பதிவாளர், திருவண்ணாமலை பதிவு மாவட்டம்-க்கு அனுப்பியுள்ளார். அதற்கு மேல்முறையீட்டு

அலுவலர்/மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), திருவண்ணாமலை பதிவு மாவட்டம் அவர்கள் மனுதாரரின் மனுக்களை அசலாக பிரிவு 6(3)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் செங்கம் அவர்களுக்கு எண்.6819/ஆ1/2023, நாள் 04/10/2023 மற்றும் எண்.7071/ஆ1/2023, நாள் 25/10/2023 ஆகியவற்றின் வாயிலாக அனுப்பி மனுதாரர் கோரிய தகவல்களை நேரடியாக அனுப்ப அறிவுறுத்தியுள்ளதோடு, அதன் நகல்களை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார்.

3. அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 29/11/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 20910/SCIC/2023 ஆக பதிவு செய்தது. பொதுத் தகவல் அலுவலர்/சார்பதிவாளர், செங்கம் அவர்கள் மனுதாரருக்கு கடித எண்.344/2023, நாள் 17/10/2024 வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும் தெரிவித்துள்ளார். பின்னர், மனுதாரர் 30/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனுவினை அனுப்பியுள்ளார்.

4. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 15/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**5. இன்றைய விசாரணைக்கு, மனுதாரருடன் அவரது மகன் திரு.கௌதம் என்பவரும் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.பொ.சிவசங்கரன், சார்பதிவாளர், செங்கம் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி ஏற்கெனவே மனுதாரருக்கு செப்டம்பர் 2023 -லும், 25/10/2023 மற்றும் 17/10/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக மனுதாரர் கோரிய ஆவணங்களைப் பெற எவ்வளவு தொகை செலுத்த வேண்டுமென்ற தகவலை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், தொகை செலுத்துவதற்கு முன்பாக நேரடியாக செங்கம் சார்பதிவகத்திற்கு சென்று தனது கோரிக்கை தொடர்பாக பொது அதிகார அமைப்பினரிடம் விசாரித்ததற்கு அவர்கள் அத்தகைய தாய் பத்திரம் எதுவும் பராமரிக்கப்படவில்லை எனத் தெரிவித்ததாக ஆணையத்திடம் கூறினார். இன்றைய விசாரணையின் போது, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் தெரிவித்த கருத்தான, தாய் பத்திரம் பராமரிக்கப்படவில்லை என்பதையே தெரிவித்தார். அவ்வாறான நிலையில், மனுதாரரை தொகை செலுத்தி, தாய் பத்திரம் பெற்றுக் கொள்ள தகவல் அனுப்பியிருந்ததை ஏற்கவியலாது, அர்த்தமற்றது, தவறான தகவலை அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அனுப்பியிருக்கிறார் என்பது தெளிவாகிறது.**

**எனவே, அப்போதைய (செப்டம்பர் 2023 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திரு.பால்வின் சிவராஜ் (தற்போது) மாவட்டப் பதிவாளர், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் மீது ஏன் பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று, அதனை 15/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**மேலும், பொதுத் தகவல் அலுவலர்/சார்பதிவாளர், மனுதாரருக்கு திருத்திய தகவலான தமது அலுவலகத்தில் மனுதாரர் கோரியவாறான தாய் பத்திரம் பராமரிக்கப்படவில்லை என்ற தகவலை அளிக்குமாறு ஆணையம் உத்தரவு பிறப்பித்ததை, பொதுத் தகவல் அலுவலர்/சார்பதிவாளர் ஏற்றுக் கொண்டு, அவ்வாறான தகவலை எழுத்துப்பூர்வமாக மனுதாரருக்கு இன்றைய விசாரணையின் போது அளித்தார். அதனை மனுதாரரும் பெற்றுக் கொண்டார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். SA 20910/SCIC/2023</u>

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
செங்கம், திருவண்ணாமைலை.

2.திரு.பால்வின் சிவராஜ்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர், செங்கம் சார்பதிவகம்
தற்போது மாவட்டப் பதிவாளர்
மார்த்தாண்டம் பதிவு மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.அ.ராயர் த/பெ. அப்பாசாமி
கீழ்ராவந்தவாடி
க.எண்.934, டேங்க் தெரு
தண்டராம்பட்டு அஞ்சல் மற்றும் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம் - 606 707.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC